பக்கங்கள்: பதினாறு
Registered as a News Paper in Sri Lanka
விலை ரூபா: 5-00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 28 புதன்கிழமை (14-11-2001) தொலைபேசி: 3378 ஒலி 338

அனைவருக்கும்
எமது தீபாவளி
நல்வாழ்த்துக்கள்
காவேரி
பட்டுச் சோலை
48, பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்
T. P 2333
(சி-2854)

## வாக்குப்பெற கட்சிகள் புதிய யுக்தி

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காண புலிகளுடன்பேசுவது அவசியமாகும்

## தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜே.வி.பி

(நமது நிருபர்)

**நாட்டில் நிலவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமாயின் முதலாவதும் முக்கியமானதுமான நிபந்தனை தமிழீழ விடுதலைப் புலிகளுடனும், ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதேயாகும் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.**

**ஜே.வி.பியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இந்தக் கருத்தானது புலிகள் பற்றிய ஜே.வி.பியின் நிலைப்பாட்டில் பாரிய மாற்றத்தை காட்டுவதாக உள்ளது.**

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கான தேர்தல்விஞ்ஞாபனத்தை ஜே.வி.பி நேற்று கொழும்பில் வைத்து வெளியீடு செய்தது.

நாட்டில் நிலவும்இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு முக்கியமாக தமிழீழ விடுதலைப் புலிகளுடனும்,ஏனைய தமிழ்க்கட்சிகளுடனும் பேச்சு நடத்துவது அவசியமாகும் என்று தெரிவித்துள்ளது.

நாட்டைக் கட்டி எழுப்பும் திட்டம் என்ற தலைப்பில் ஜே.வி.பி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது.

இத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துவது தொடர்பான மூன்று நிபந்தனைகள் முன்னிலைப் படுத்தப் பட்டுள்ளது.

இதுஇவ்வாறிருக்க பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு கடந்த மாதம்ஆட்டம் கண்டபோது சிலநிபந்தனைகளின்அடிப்படையில் ஜே.வி.பி ஆதரவுவழங்கி வந்தது

(16ம் பக்கம் பார்க்க)

## தீபாவளி வாழ்த்துக்கள்

வாசகப் பெருமக்கள்
அன்பர்கள் நண்பர்கள்
வர்த்தகப் பெருமக்கள்
விளம்பரதாரர்கள் அனைவருக்கும்
ஒளிமயமான தீபாவளி வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகம்,

## யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர தமிழ்-முஸ்லிம்பிரதிநிதிகளுடன்பேச்சு

### தேர்தல் விஞ்ஞாபனத்தில் பொ-ஜ-முன்னணி

(கொழும்பு)

இந்நாட்டில் வாழுகின்ற சிறுபான்மை மக்களுக்கு குறிப்பாக தமிழ்மக்களுக்குப் பிரச்சினைகள் உண்டென்பதை பொதுஜனஐக்கியமுன்னணி அரசு ஏற்றுக்கொண்டுள்ளது இப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வு பேச்சுவார்த்தை மூலம் எட்டப்பட வேண்டுமென்பதில் அரசு அக்கறைகொண்டுள்ளது. இவ்வாறு பொதுஜனஐக்கிய முன்னணியின் தேர்தல்விஞ்ஞாபனத்தில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

அக்கட்சிநேற்று தேர்தல் விஞ்ஞாபனத்தைவெளியிட்டு வைத்துள்ளது அதில்மேலும் கூறப்பட்டிருப்பதாவது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக தமிழ்,முஸ்லிம் மக்களின் சகல பிரதிநிதிகளுடனும் பேச்சுநடத்த தயாராகவும் உறுதியாகவும் பொதுஜன ஐக்கியமுன்னணி இருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும்நோக்கத்துடன் அர்த்தபுஷ்டியான

(16-ம் பக்கம் பார்க்க)

## பயண அனுமதியின்றி விமானச் சீட்டு

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம வருவதற்கானபயண அனுமதி இன்றி விமானச்சீட்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட வேட்பு மனு செல்லுபடியாகும்

### நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஈ.பி.டி.பி தாக்கல் செய்த வேட்பு மனுவை நிராகரிக்குமாறு கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தமிழ்க் கட்சிகளின்கூட்டமைப்பினால் தாக்கல் செய்யப்பட்ட மனுநேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நிராகரிக்கப் பட்டதுடன் அது செல்லுபடியாகுமென தீர்ப்பளித்துள்ளது.

இந்த மனுவை தமிழ்க் கட்சிக்கான கூட்டமைப்பின்சார்பில் ரெலோவின்வல்வெட்டித்துறை நகர சபைத்தலைவர் என். கே. சிவாஜிலிங்கம் தாக்கல் செய்திருந்தார்.

இம் மனுவை விசாரணை செய்த நீதிபதிகள் ஜயசிங்க எதிரிசிங்க ஆகியோர் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு தாக்கல் செய்திருந்த மனுவுக்கு எவ்விதமான ஆதாரமும் இல்லை என்று கூறி மனுவை நிராகரித்து விட்டார்கள்.

இம் மனு விசாரணையின் போது தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின சார்பில் சட்டத்தரணி இ. தம்பிரத்தின

(16ம் பக்கம்பார்க்க)

## சமுர்த்தி அலுவலகம் சீல்வைத்து மூடப்பட்டது

(கொழும்பு)

கொழும்பிலுள்ள சமுர்த்தி அலுவலகம் முன்னறிவித்தல் எதுவுமின்றி நேற்று முன்தினம் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.

சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவின் ஊழலுக்கு சமுர்த்திப் பணிப்பாளர் குமாரி நவரட்ணம் ஆதரவாக செயற்பட்டார் என்றகாரணத்தாலேயே சமுர்த்தி அலுவலகம் சீல் வைக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

இதேவேளை குமாரி நவரட்ணத்துக்கு இடமாற்ற உத்தரவு விடுக்கப்பட்டபோதும்அவர் உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்து உத்தரவைஇடை நிறுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ)

## கடலில் மூழ்கி 3மாணவர்கள்மரணம்

[மட்டக்களப்பு]

கடலில் நீராடிக் கொண்டிருந்த மூன்று முஸ்லிம் மாணவர்கள அலையில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

இப்பரிதாபச் சம்பவம் மட்டக்களப்பு நிந்தவூரில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

நிந்தவூர் அல்மதீனா வித்தியாலயத்தில் தரம 11ல்கல்வி கற்கும் மாணவர்களே மரணமானவர்களாவர். [ந.4]

## ஐ.தே.க. வேட்பாளரை பொ.ஜ.மு வேட்பாளர் வீடுபுகுந்து தாக்கினார்

[மட்டக்களப்பு]

பொதுஜனஐக்கிய முன்னணி வேட்பாளர் ஒருவர் தனதுசகாக்களுடன் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளரின் வீட்டுக்குள் புகுந்துஅவரைக் கடுமையாகத் தாக்கியதுடன் அவரது மனைவியின் சட்டையைக்கிழித்து 8பவுண் தங்கச் சங்கிலியையும் அபகரித்துச் சென்றுள்ளார்.

இததேர்தல் காடைத்தனம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.


மட்டக்களப்பு மாவட்ட பொதுஜன ஐக்கியமுன்னணி வேட்பாளர் ராஜன்மயில்வாகனம் எனபவர் நேற்றுக் காலை ஐ.தே.க.வேட்பாளர் அரசரட்ணம் சசிதரன் என்பவரின் வீட்டுக்குள புகுந்து அங்கிருந்த தேர்தல் பதாகைகள கட்டவுட்டுக்கள என்பவற்றை சேதப்படுத்தியதுடன சசிதரனையும் கடுமையாக தாக்கியுள்ளார் என்று பொலிஸில் புகார் செய்யப்பட்டுளளது (இ)

உண்மையான சுதந்திரமும் சகோதரத்துவமும்
சமாதானமும் மலர மீன் சின்னத்திற்கு வாக்களியுங்கள்

சுயேச்சைக் குழு

X

தம்பிராசா சுபத்திரன் (றொபேட்) ஈ.பி. ஆர். எல். எவ். (3963)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தீபாவளி சிறப்பு மலர்

## 14 - 11 - 2001

## யுத்தத்திற்கு முடிவுகட்ட சகலரும் முன்வர வேண்டும்

### நல்லை ஆதீன முதல்வர்



ஈழத் தமிழ் மக்கள் படும் இன்னல்கள் ஒழிந்து அவர்களின் வாழ்வில் ஒளிமயமான எதிர்காலம் ஏற்பட நாம் எல்லோரும் இறை பரம்பொருளை தீபாவளித் திரு நாளாகிய இன்று கூட்டாக வழிபட வேண்டும்.

இவ்வாறு தீபாவளித் தினத்தை யொட்டி நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் விடுத்த தீபாவளிச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச் செய்தியில் அவர் மேலும் தெரிவிக்கையில்; யுத்தத்தின் கொடூரத்தால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வறுமையின் பிடிக்குள் சிக்கியுள்ளனர் — இவர்களுக்கு உதவி செய்வது பரோபகாரிகளின் தலையாய கடமையாகும். இறைவழிபாடு என்பது இனபேதம் அற்றது. அங்கு ஏழை மக்களே தெய்வீகப் பணிக்குரியவர்கள் நம் அயலவர்களின் — சகோதரர்களின் வறுமையைப் போக்கி பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறத்தைச் செய்ய வசதி படைத்தவர்கள் முன்வரும் அதே வேளை இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு மக்களின் உயிரிழப்புக்களையும் — மனவேதனைகளையும் தடுக்க சகல தரப்பினரும் இறைவனின் பெயரால் முன்வர வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தீபாவளி திருநாளே வருகவே

திசைமாறிய தென்றலாய்
தொலைந்துபோன
உறவுகளை
சேர்க்கவென வரும்
தீபாவளி திருநாளே வருக

அடுக்கடுக்காய் தீபம்
வைத்தே வொரு
அனைத்து மக்களின்
உள்ளத்திலும்
மகிழ்ச்சியூட்ட வருகவே.

கவிஞன்
**ஐ. கலையமுதன்**
கரம்பைக்குறிச்சி, வரணி

### மறவாத் தீபாவளி

திறந்தவெளிச் சிறையிலிருந்து
திண்டாடும் வேளையிலும்
கூட
மறந்த தில்லைத்
தீபாவளியும்
மௌனமாய் வந்து
சென்றதுவே

**உ. காஞ்சனமாலா**
, ஏழாலை

## நற்சிந்தனை மேலோங்கி வாழ்வில்வளம்பெருகட்டும்

### அமைச்சர் டக்ளஸ் தீபாவளிச் செய்தி

(யாழ்ப்பாணம்)

இன்று தீபாவளித் திருநாள் தீமைகளைத்தேடி அழிந்து நல்லொளி வீசச் செய்யும் நன் நாள் புத்தாடை புனைந்து நல்லாசிகளை நாடிச்செல்லும் பொன்னாள்.

இந்த நன்னாளில் நல்ல சிந்தனைகள் மேலோங்கவும் நல்ல வளம் வாழ்வில் பெருகவும் ஒவ்வொருவரையும் வாழ்த்துகிறேன்.

இவ்வாறு வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தீபாவளி தினத்தையொட்டி தமிழ் மக்களுக்கு விடுத்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

திருநாளின் மகிழ்ச்சி இந்த நாட்டில் எங்கும் என்றும் நிலை பெறட்டும். அதற்கு யுத்தம் அகன்ற நிம்மதியான அமைதிச் சூழல் தோன்றட்டும.

இதற்காக சமாதான சகவாழ்வு காணும் நடைமுறைச் சாத்தியமான மாற்று வழியில் நடைபோட ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். இவ் வகையில் பொறுப்புணர்வுடன் நிதானமாக சிந்தித்து விவேகமான முடிவைப் பொதுமக்கள் ஒவ்வொருவரும் வெளிப்படுத்த முன்வரவேண்டும், என்று குறிப்பிடப்பட்டுள்ளது; (உ)


அனைவருக்கும் எம் தீபாவளி நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்

★ சுபமுகூர்த்தப் பட்டுப் புடவைகளா?
★ ஆடவர் மங்கையர்களுக்கான வண்ண ஆடை வகைகளா?
★ சிறுவர்களுக்கான ஆடை வகைகளா?

அனைத்திற்கும்

**SRI RAAM SILK**

5/23,(48), நவீனசந்தை, (சி 2571) யாழ்ப்பாணம்

வாடிக்கையாளர், அன்பர்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த

**தீபாவளி வாழ்த்துக்கள்**

★ திருமணப் பட்டுப் புடைவைகள் ★ சாறி வகைகள்
★ சாறிகளுக்கேற்ப பிளவுஸ் வகைகள் ★ ஆண்கள் மகளிர்களுக்கான அனைத்து ஆடைத் தினுசுகளுக்கும்

**மகாநதி புடைவை அகம்**

16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
16, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.

(கி-2572)

தொலைபேசி இல 2552

எம்மினிய அன்பர்கள், வாடிக்கையாளர்கள் நண்பர்கள் அனைவருக்கும்

**இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்**

★ அழகிய தங்க நகைகளுக்கு ... விவேகா
★ 22 கரட் தங்க நகைகளுக்கு ... விவேகா
★ நம்பிக்கை, நாணயம், உத்தரவாதத்துடன் தங்க நகைகளைப் பெற்றிட ... விவேகா

**விவேகா நகை மாடம்**

131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இணையகம் :

**நியூ ராதிகாஸ் நகை மாளிகை**

189, கஸ்தூரியார் வீதி, (கி-2573) யாழ்ப்பாணம்.

## இன்று ஒரு தகவல்

### பழக்கமா? பரம்பரையா பெரிது?

மன்னன் ஒருவன் தனது அறையில் இருந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான். அப்போது அங்கே மந்திரி வந்தான். இருவரும் பல்வேறு நாட்டு நடப்புகளைக் கதைத்தார்கள், அப்போது மன்னனுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. பழக்கமா? பரம்பரையா? பெரிது என்று உடனே மன்னன் மந்திரியை நோக்கி இவற்றில் எது பெரிது என்று கேட்டான். அப்போது மந்திரி பரம்பரையே பெரிது என்று கூறினான்.

உடனே இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இருவரும் தொடர்ந்து தமக்கு எட்டிய அறிவுவரை உதாரணங்களைக் கூறி வாதிட்டார்கள். அப்போது மன்னன் தான் இருந்த மேசையில் ஒரு பூனை இருந்தது. அதன் தலைமேல் ஒரு பலகை வைத்து அதன் மேல் விளக்கு வைக்கப்பட்டு இருந்தது. அந்த விளக்கொளியில் தான் அரசன் படிப்பான். ஆகவே தனது பழக்கத்தாலேயே இப்பூனை விளக்கை தாங்கி நான் படிக்கும்வரை நிற்கின்றது. ஆகவே பழக்கமே பெரிது என்று கூறினான்.

அதனை மறுத்த மந்திரி பரம்பரையே பெரிது எனக் கூறி அதனை சில நாட்களுள் தான் நிரூபிப்பேன் எனகூறிச் சென்றான். வீட்டிற்குச் சென்ற மந்திரி ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். உடனே அவனுக்கு ஒரு யோசனை வந்தது. பின் ஒரு எலியைப் பிடித்துப் பையில் போட்டுக் கொண்டு அரண்மனைக்குச் சென்றான். மந்திரியைக் கண்ட மன்னன் ஏளனமாக பரம்பரை பெரிதென்றீரே நிரூபித்து விட்டீரே? என்று கேட்டார். எப்படியாவது இன்று நிரூபித்துக் காட்டுவேன் என கூறி அமர்ந்தார்.

தான் கொண்டு வந்த எலியைமெதுவாக பைவாயை திறந்து பூனையின் முன்பாக விட்டான். உடனே பூனை விளக்கை விழுத்திக்கொண்டு பாய்ந்து எலியைப் பிடித்தது. பார்த்தீர்களா அரசே உங்களது பழக்கத்திலும் அதனது பரம்பரையேபெரிது ஆதலால் தான் விளக்கை விழுத்திக் கொண்டு எலியைப் பிடிக்கப் பாய்ந்தது என்று மந்திரி விளக்கம் கூறினான். ஆகவே மன்னனும் பரம்பரையே பெரிது என்பதை ஒப்புக் கொண்டான்.

இதேபோல் தான் நமது அரசியல்வாதிகளும் நம்முன் தாமே பெரியவர்கள். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என கூறுவர். தமது ஆட்சியை கைப்பற்றும் வரைக்கும் பல கோட்பாடுகளை பழக்கமாக வைப்பார்கள். ஆட்சியைக் கைப்பற்றி ஆசனத்தில் அமர்ந்தவுடன் தமது பரம்பரை குணத்தைக் காட்டத் தொடங்கி விடுவர். □

க. கேதீஸ்வரன்
வரணி

## சுகாதாரக் கேடான வகையில் பாண் எடுத்துச்சென்று விநியோகித்த பேக்கரிகள் மீது வழக்கு தாக்கல்

(ஏழாலை)

பேக்கரிகளில் இருந்து பாண், பணிஸ் என்பவற்றை அழுக்கடைந்த பெட்டிகளிலும் தூசுபடிந்த உறைகளிலும் எடுத்துச்சென்ற பேக்கரி விநியோகஸ்தர்கள் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை மல்லாகம், சுன்னாகம் பகுதிகளில் பாண் விநியோகத்தில் ஈடுபட்டோரின் பாண்பெட்டி உறை என்பன சுகாதாரப் பரிசோதகர்களால் பரிசோதிக்கப்பட்ட போது அழுக்கடைந்தபெட்டியிலும் தூசுபடிந்த உறைகளிலும் பாண், பணிஸ் என்பவை எடுத்து செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டமையால் தூய்மை கெடும் ஆபத்திலிருந்து உணவைப் பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதைக் காட்டி இவர்கள் மீது மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 3 பேக்கரிகளும், மல்லாகத்தை சேர்ந்த 2 பேக்கரிகளும், உடுவில், உருமபிராய் பகுதியை சேர்ந்த தலா ஒவ்வொரு பேக்கரிகளுமாக மொத்தம் 7 பேக்கரிகள் சுகாதாரத்திற்கு தீங்கான முறையில் பாண்பெட்டி, பாண் போடும் உறை என்பவற்றை பாவித்ததாக தெரிவிக்கப்படுகிறது. (உ-12)

## இனிவரும் காலத்தில் நடைபாதை வியாபாரம் முனியப்பர்ஆலய பகுதியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முனியப்பர் ஆலயப் பகுதியில் நடைபாதை வியாபாரிகள் நலன் கருதி கடைகள் அமைக்க யாழ் மாநகரசபை திட்டமிட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

தற்போது தீபாவளியை ஒட்டிநடைபாதை வியாபாரிகள் பெருந்தொகையில் யாழ். நகருக்குப் படையெடுத்திருப்பதனால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து மற்றும் இட நெரிசலைத் தவிர்க்கும் வகையிலேயே மாநகரசபை இம் முடிவை எடுத்துள்ளதாகவும்.

விரைவில் முனியப்பர் ஆலயப்பகுதிக்கு நடைபாதை வியாபாரத்தை மாற்றும் முயற்சிகள் துரிதமாக இடம் பெற்று வருவதாகவும் கூறப்படுகிறது. (உ-10)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் நிறை குறைந்த சிசுக்கள் பிறப்பு வீதம் அதிகரிப்பு

(வவுனியா)

கிளிநொச்சிமாவட்ட வைத்தியசாலையில் கடந்த 22 மாதங்களில் 405 சிசுக்கள் நிறைகுறைந்து பிறந்துள்ளன என்று புள்ளிவிபரத் திரட்டல் மூலம் தெரிய வந்துள்ளது.

வன்னி மீது அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடை மற்றும் இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக கர்ப்பிணித் தாய்மார் போசாக்கின்மையால் மோசமாகப் பாதிக்கப்பட்டதன் காரணமாகவே நிறை குறைந்த சிசுப்பிறப்புகள் அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வயிற்றோட்டம் மற்றும் போசாக்கின்மையால் குழந்தைகள் இறப்பு வீதம் அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ)

## மோதலில் ஈடுபட்ட 15 பேர் கைது

[வவுனியா]

வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கும் சுயேட்சைக்குழு ஆதரவாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தில்17பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் சுயேட்சைக்குழு வேட்பாளர் உட்பட15பேரை நேற்றுமுன்தினம் நீதிவான் தலா 10ஆயிரம்ரூபா பிணையில்விடுதலை செய்தார். (வ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வெஸ்டன் யூனியன்/பணப் பரிமாற்றல் மற்றும் மக்கள் வங்கியின் அச்சுவேலிக்கிளை திறப்பு விழா தொடர்பான கலந்துரையாடல், எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10 30 மணிக்கு மக்கள் வங்கியின் பிரதேச முகாமையாளர் எஸ். சிவபாத விருதயர் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

## தேர்தல் வன்முறைகளை பொலிஸார் தடுக்கவில்லை ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

தற்பொழுது இடம்பெற்று வரும் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துவரும் அதேவேளை அதனைக்கட்டுப்படுத்துவதற்கு பொலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஐக்கியதேசியக் கட்சியின் பேச்சாளர்கருணாசேனகொடித்துவக்கு கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டின் போதே கருணாசேன கொடித்துவக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை வேட்புமனுத் தாக்கல் செய்தபின் நேற்றுமுன்தினம்வரை 473 தேர்தல் வன்முறை சம்பவங்கள்இடம்பெற்றுள்ளதாக பொலிஸில் தேர்தல் அலுவலகத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (வ)

## சோதனைக்கு மத்தியிலும் பல்கலை கௌரவிக்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகம் பல சோதனைகளின் மத்தியில் இயங்கி வந்தாலும் நாம் ஆண்டுதோறும் நிகழ்த்தி வரும் பட்டமளிப்பு விழாவில் தமிழுலகில் உள்ள கல்விமான்களை அழைத்து கௌரவித்து வருகின்றோம் அந்த வகையில் இம் முறை அருட்கவி விநாசித்தம்பியை கௌரவித்தோம். அக்கௌரவம் மேலும் அதிகரிக்கப்படவேண்டும் என்பதைஉளமாரஉணர்கிறோம்.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அருட்கவி சீ.விநாசித்தம்பியின் இலக்கியப் பணியைக் கௌரவித்து யாழ் பல்கலைக்கழகம் முதுகலை மாணிப்பட்டம் வழங்கியமையை பாராட்டி அண்மையில் நடத்தப்பட்ட விருந்துபசாரத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

அளவெட்டி நாகேஸ்வரம் தேவஸ்தானத்தின் அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விருந்துபசாரத்திற்கு ந.சிவசண்முகமூர்த்தி தலைமை வகித்தார்.

இந்து சமயப் பேரவை செயலாளர் சி.சக்திகிரீவன் அருட்கவி விநாசித்தம்பிக்கு பொன்னாடை போர்த்தி பாராட்டுரை நிகழ்த்தினார்.

நல்லை ஆதீன முதல்வர்ஆசியுரை வழங்கினார். யாழ் மாவட்ட முன்னாள் நீதிபதி மு.திருநாவுக்கரசு, பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஐ.கோ. சந்திரசேகரம், நா.வி.மு.நவரத்தினம் ஆகியோரும் உரையாற்றினர் (எ)

## மரம் நாட்டும் வைபவம்

(கோப்பாய்)

கோப்பாய் வடக்கு சபாபதிப்பிள்ளை நாவலர் சனசமூக நிலையத்தில் அண்மையில் மரம் நாட்டு விழா நிலையத் தலைவரும் கிராம உத்தியோகத்தருமான எஸ். ரீ. வரதராஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் எஸ். கேதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (இ-237)

## பேருந்துப் பயணங்களில் இன்று முதியோர் புறக்கணிக்கப்படுகின்றனர்

### முதியோர்தின விழாவில் கவலை

(யாழ்ப்பாணம்)

கால மாற்றம் ஏற்படுத்திய விளைவுகளால் முதியோர்களை புறக்கணிக்கின்றதன்மை இங்கு மட்டுமல்ல உலகின் ஏனைய நாடுகளிலும் ஏற்பட்டிருக்கின்றது. அதனால் முதியோர் பற்றிய விழிப்புணர்வு சர்வதேச ரீதியாக இன்று வலுப்பெற்று வருகிறது.

குருமபசிட்டி நல்வுற்றோர் நலனோன்புநிலையம் ஏற்பாடு செய்த முதியோர் தினம் கடந்த திங்கட்கிழமை யா. உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் மேற்படிநிலையத் தலைவருமானரி.வி கிருஷ்ணசாமி தலைமையில நடைபெற்ற போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கைசெஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது மக்கள் சிறந்த கலாசாரத்தை விரும்புபவர்கள பெரியோரையும முதியோரையும் கனம் பண்ணும சால்பு பொருந்தியவர்கள் ஆனால மாணவர்களுக்கு முதியோர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தத் தவறி விட்டோம. யாழ்ப்பாணததில பெருந்துப் பயணங்களில் கூட முதியவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். மாணவர்களும் இளைஞர்களும் பெற்றோருக்குக் கட்டுப்படாது இருப்பது வேதனைக்குரியவிடயமாகும. எமது சமூகத்தின் எதிர்காலத்திற்கு ஏற்படப் போகும் பாரியசவாலாக இது அமைந்து விடும்.

போர் இடமபெயர்வு போன்ற காரணிகளால் முதியோர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். தனிமையால் பல நோய்கள் அவர்களைத் தாக்குகின்றன, இதனால் சில வருடங்களுக்கு முன்பு90 வருடங்களாக இருந்தசராசரிவாழ்வுக்காலம் இன்று 70ஆகக் குறைந்து விட்டது.

முதியவர்கள் பாதுகாப்பே பரிகாரததிலும் சிறநதது என்பதை உணர்ந்து நோய்கள் தம்மை அணுகாமல் தடுத்தும் மனமகிழ்ச்சியுடனும் இருந்தால் ஆயுளை நீடித்த ஆரோக்கியமாக வாழ முடியும்' என்றார்.

வரவேற்புரையை நிலைய உபதலைவர் அ.சக்திவேல் நிகழ்த்தினார்-'மாமனிதர்' கலைஞானி உட்பட பிரமுகர்கள் பலர் இந் நிகழ்வில்கலந்து கொண்டனர். உ 106

## யாழ் .இளைஞனை திருகோணமலையில் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

திருகோணமலைக்குச் சென்ற தனது மகனைக்காணவில்லையென்று அவரது பெற்றோர் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்துள்ளனர்.

குணரத்தினம் விஜயகுமார் (வயது 19)என்ற கொண்டாவில் வடக்கைச்சேர்ந்த இளைஞரே காணமல் போனவரென முறையிடப்பட்டுள்ளது.

பாஸ்போட் எடுப்பதற்காக கொழும்பு செல்ல திருகோணமலையில்தங்கி நின்றபோது, பிரஸ்தாப இளைஞனைக் காணவில்லை என்பதைதாம் நண்பர் மூலம் அறிந்ததாக பெற்றோரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-19-9)

## சிந்தனைக்கு விருந்து

### சுகம் மீளுமோ?

தொடர்வண்டி ஏறிமிகத் தூங்கி விடியக்
கடக்கையிலே ஆனை யிறவை - நடனத்தை
இட்டுக் குதிக்கும் இதயம்தாய் மண்ணினைத்
தொட்டசுகம் மீளுமோ சொல்?

தொடர் வண்டி - Train

'பழையவன்'

# மக்கள் வங்கி

## வாடிக்கையாளர்களுக்கோர் நற்செய்தி

**21. 11. 2001 புதன்கிழமை அன்று**

**அச்சுவேலியில் கோலாகலமான திறப்பு விழா வைபவம்**

**அச்சுவேலிக்கு ஒரு முழுமையான மக்கள் வங்கி கிளை**

தற்போது யாழ் ஸ்ரான்லி வீதியின் நீடித்த கருமபீடமாக இயங்கிவரும் அச்சுவேலி மக்கள் வங்கி எதிர்வரும் 21. 11. 2001 புதன்கிழமை முதல் ஒரு தனித்துவமான கிளையாக இயங்கவுள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பெரு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் அவர்கள் பிரதம அதிதியாக கலந்துகொள்ளும் இவ் வைபவத்தில், அரச உயரதிகாரிகள் திணைக்களத் தலைவர்கள் மக்கள் வங்கி உயரதிகாரிகள் மற்றும் பல பிரமுகர்கள் சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள்.

**எமது அன்பான வாடிக்கையாளர்களே**

தாங்கள் அனைவரும் அன்றைய தினம் இவ் வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டும் என அன்புடன் அழைக்கிறோம்.

# மக்கள் வங்கியின்

**வர்த்தகர்களுக்கும், நிறுவனங்களுக்குமான - நடைமுறைக் கணக்குகள்**

மகளிருக்கான விசேட சேமிப்புத் திட்டமான வனிதா வாசனா
குழந்தைகளுக்கான சேமிப்புத் திட்டமான இசுரு உதான
பாடசாலை மாணவர்களுக்கான சேமிப்புத் திட்டமான சிசு உதான
விசேட சேமிப்புத் திட்டமான ஜனஜய

மற்றும் மாதாந்த சேமிப்புக் கணக்கான முதலீட்டுச் சேமிப்புக் கணக்குகள் போன்ற புதிய கணக்குகளை அன்றைய தினம் ஆரம்பித்தும் தற்போது அச்சுவேலியில் தாங்கள் வைத்திருக்கும் கணக்குகளில் பண வைப்புக்களை மேற்கொண்டும் புதிய வாடிக்கையாளர்களை அறிமுகம் செய்தும் வைபவத்தை சிறப்பிக்குமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

**நடைமுறைக் கணக்கு வாடிக்கையாளர்களுக்கு அன்றைய தினம் தொடக்கம் அச்சுவேலி கிளைக்குரிய காசோலைப் புத்தகம் வழங்கப்படும் என்பதனையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்**

அச்சுவேலி மக்கள் வங்கியின் நடவடிக்கைகள் மேலும் விரிவுபடுத்தப்பட வங்கியின் சொத்துக்களான வாடிக்கையாளர்களாகிய தங்களது பேராதரவினை மேன்மேலும் வேண்டி நிற்கிறோம்.

**அன்றைய தினம் காலை 8.50ற்கு அச்சுவேலி மக்கள் வங்கி முன்றலில் தவறாத தங்களின் வரவை**

**ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.**

**பிராந்திய முகாமையாளர்**
மக்கள் வங்கி யாழ்ப்பாணம்

(வி-2871)

# தீபாவளி சிறப்பு மலர்

## 14 - 11 - 2001

# கொடுமைகள் ஒழிக்கப்பட்ட தீபாவளி நாளில் எம் அவலங்கள் தீர இறைவனை வேண்டுவோம்

பிரம்மஸ்ரீ ச. க. சுதர்சனக்குரு
ஸ்ரீ வல்லிபுரக் கோவில்

"ஆண்டிற் கொரு தீபாவளியாம், அதனை ஆண்டியும் கொண்டாட வேண்டுமம்மா!'' இப்படியொரு பேச்சு வழக்கு நம்தமிழ் மக்களிடையே உள்ளது. முன்பொருசமயம் நரகாசுரன் என்னும்கொடிய அரக்கன் தேவர்களையும், மனுஷர்களையும் மிகவும் கொடுமைப்படுத்தினான். வீடுகளில் விளக்குகள் ஏற்றக்கூடாது. நல்ல தூய்மையான துணிமணிகளை அணியக் கூடாது. யாரும் நல்ல விதமான பட்சணங்களை உண்டு களித்துக் கொண்டாடக் கூடாது எனப் பலவேறு விதமான சட்டங்களையெல்லாம் போட்டுத் துன்புறுத்தினான். ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவானவர் நரகாசுரனை வதம் செய்த தினம் தான் 'தீபாவளித் திருநாள்' ஆகும். மரிக்கும் போது நல்லறிவுவரப்பெற்ற நரன் இறைவனிடம் ''தான் மரித்த தினத்தை உலக மாந்தர் கோடியுடுத்து பட்சணங்கள் உண்டு மகிழ்ந்து உறவினருடன் கொண்டாட வேண்டும்'' என்று வரம்கேட்டான். இறைவனும் அவ்வாறே அவனுக்கு வரமளித்தார் என்று சில நூல்களில் காணப்படுகிறது. உலகோர் குறிப்பாக இந்துக்கள் இத்தினத்தை பண்டிகை தினமாகக்கொண்டாடி இறைவனை வழிபடுகிறார்கள்.

தீபாவளியன்று உதயத்திற்கு முன் ஸ்நானம் செய்து கர்மானுஷ்டானங்களை முடித்து புத்தாடைகள் அணிந்து மகிழ்வாகக் கொண்டாட வேண்டும். ஆலயங்களுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து பூசை வழிபாடுகளிலும் கலந்து கொள்ளல் வேண்டும்.

### நரகாசுரன் வதம்

முன்பு ஒரு சமயம் பூமியின் புதல்வனான நரகாசுரன் இந்திரனின் குடையையும். இந்திரனின் தாயாரான அதிதியின் குண்டலங்களையும் அபகரித்த தோடில்லாமல், மணபர்வர்தம் என்ற இடத்தையும் பிடித்து வைத்துக் கொண்டான்.

இது பற்றி இந்திரன் துவாரகைக்கு வந்து ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவிடம் முறையிட்டுக்கொண்டான். விவரம் அறிந்த பரமாத்மா, சத்தியபாமாவையும், அழைத்துக் கொண்டு நரகாசுரனின் நகரான பிராக்ஜோதிஷ புரத்தையடைந்தார்.

அங்கு சென்ற பரமாத்மாவானவர் பாஞ்சசைன்யத்தை எடுத்து முழங்கினார். முதலில் முரன் என்ற அசுரன் பகவானை எதிர்த்துப் போரிட்டு சக்கராயுதத்தால் மடிந்தான். பின்னர் பீடன என்னும் சேனாதிபதி தலைமையில் முரனின் பிள்ளைகள் வந்து, பகவானுடன் போரிட்டுஅனைவரும் சக்கராயுதத்தால் மாண்டனர்.

அதன் பின் அயக்கிரிவன், பஞ்சசனன் என்னும் மந்திரிமார்களும் ஏராளமான சேனைகளுடன் வந்து பகவானுடன் போரிட்டு மாண்டு போயினர்.

அதன் பின் பகவான் தலைநகரினுள்ளே பிரவேசித்தார். அங்கே ஏராளமான பெருஞ்சேனைகளுடன் எதிர்த்து வந்த நரகாசுரனுக்கும் பகவானுக்குமிடையில் பெரும் போர் மூண்டது. மிக மிகக் கொடியவர்களான ஏராளமான அரக்கர்களை கண்ண பரமாத்மா கொன்றொழித்தார் இறுதியில் பகவான் சக்கராயுதத்தைப் பிரயோகித்து நரகாசுரனை இரு பிளவாக்கி வீழ்த்தினார். தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். பகவானைத் தோத்திரம் செய்தார்கள்.

### பூமாதேவி வேண்டில்

அதன் பின் நரகனின் தாயாரான பூமாதேவி பேரனான பகதத்தனுடன் அங்கு வந்து பகவானைப் பலவாறு போற்றித்துதித்து 'எப்போது நீர் வராக அவதாரம் எடுத்து என்னை உன் கோட்டின்மேல் கொண்டீரோ அப்போதே உன் ஸ்பரிசத்தால் இந்த நரகன் எனக்குப் பிறந்தான்! நீயே அவனை எனக்குத் தந்தாய்! நீயே அவனை சங்கரிக்கிறாய்! என் பாரத்தைக் குறைக்கவே நீ இந்த உலகினில் அவதரித்தருள்கின்றாய்! நரகனுடைய சந்ததியைப் பரிபாலனம் செய்தருள வேண்டும்; இவன்என்பேரன். நரகனின் புதல்வன், பகதத்தன் உம்மைச்சரணடைந்திருக்கும்! இவனை நீர் காத்தருள வேண்டும். இவன் தலை மீது திருக்கரத்தை வைத்து அருள் புரியும்' என்று வேண்டினாள். பகவானும் தனது திருக்கரத்தை வைத்து பகதத்தனுக்கு அபயம் அளித்தார்.

பின்னர் சத்தியபாமாவுடன் பகவான் சொர்க்கலோகம் சென்று இந்திரனிடம் அவனது குடையையும், அதிதியிடம் குண்டலங்களையும் ஒப்படைத்துவிட்டுதுவாரகைக்கு மீண்டார்.

### அதிதியின் துதி

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவானவர் வைகுந்தம் சென்றிருந்த போது, இந்திரனின் தாயாரான அதிதி மிகவும் பயபக்தியுடன் பகவானை துதித்தாள். அதிதியினால் துதிக்கப்பட்ட பகவானானவர் அந்த தேவமாதாவை நோக்கி புன்னகை புரிந்து ''அம்மா நீ எங்களுக்குத்தாய் ஆகையால் நீ தான் எங்களுக்கு அனுக்கிரகிக்க வேண்டும்' என்று மிகவும் பெருந்தன்மையோ கூறினார்.

எனவே இத் தீபாவளித் தினத்தில் இப்பேர்ப்பட்ட பெரும் குணவானான பகவானின் கருணையை நினைவு கூர்ந்து பூபாரந் தீர்க்கும் நாராயணனை மேன்மேலும் வணங்கி நலங்கள் பல பெற்று இன்புறுவோமாக. □

தீபாவளி நன்னாளில்

வாழ்வில் இருளகற்றி நல் ஒளியினை ஏற்றி

சாந்தியும் சமாதானமும் பெருக

அனைவரையும் வாழ்த்துகின்றோம்!

COMMERCIAL BANK

கொமர்ஷல் வங்கி

உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்

# தீபாவளி சிறப்பு மலர்

## 14 - 11 - 2001

மலரும் தீபாவளி அனைவருக்கும் சாந்தி, சமாதானத்தைக் கொண்டு வர பிரார்த்திக்கின்றோம்.

உங்களது நயம், நம்பிக்கை, நாணயமுள்ள தங்க நகைகளுக்கு...

## நியூ கல்யாணி நகை அகம்

★ ஓடர் நகைகளை குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளலாம். ★

87, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(C-2557) உரிமையாளர்: லயன் சு. நித்தியானந்தன்

### சமாதானம் ஓங்கிட வேண்டும்

ஒளியேற்றி இருளை அகற்றிட வேண்டும்
உள்ளொளி கண்டு உயர்ந்திட வேண்டும்
அசுர குணத்தை அழித்திட வேண்டும்
ஆன்மீக நெறியை வளர்த்திட வேண்டும்

துன்பமும் போரும் ஒழிந்திட வேண்டும்
தூய சிந்தனை ஓங்கிட வேண்டும்
ஆணவம் அகந்தை அடங்கிட வேண்டும்
அன்பினால் சமாதானம் ஓங்கிட வேண்டும்:

சமூகஜோதி
கா. கணேசதாசன்

அனைவர் உள்ளங்களிலும் ஒளி வீசிட தீபத் திருநாள் வாழ்த்துக்கள்!

அழகிய வடிவமைப்புக்களை கொண்ட தரம் வாய்ந்த புத்தம் புதிய தளபாட வகைகளை யாழ். நகரில் பெற்றிட

## திரேசா தளபாட மாளிகை

155, 157, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(C-2560)

### தீபாவளித் தீபங்கள்

கொடுமைகள் அகற்றிடும் தீபாவளி
கூக்குரல் கலைத்திடும் தீபாவளி
கடமையாய் வந்திடும் தீபாவளி
கவிதைகள் தந்திடும் தீபாவளி

கோபுரத்தில் கூத்தாடும் தீபாவளி
குடிசையில் கொண்டாடும் தீபாவளி
தேவர்கள் காத்திடும் தீபாவளி
தெய்வங்கள் கவர்ந்திடும் தீபாவளி

நல்லை அமிழ்தன்

அனைவர் இல்லங்களிலும் ஒளி பிரகாசிக்க எம்மினிய தீபாவளி வாழ்த்துக்கள்.

மங்கையரின் எழில்மிகு தோற்றத்திற்கு மென்மேலும் மெருகூட்ட தங்க நகைகளை அணிந்து மகிழ்ந்திட

## சிறி மீனாட்சி தங்க மாளிகை

187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C-2559)

வாடிக்கையாளர்கள் அன்பர்கள் யாவருக்கும் எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்.

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுவையான ஐஸ்கிறீம் குளிர்பான வகைகளுக்கு

## லிங்கன் கிறீம் ஹவுஸ்

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(C-2563)

துன்பங்கள் நீங்கி துயரங்கள் பறந்தோட அனைவர் இல்லங்கள் எங்கும் ஒளி பரவ எம் தீபாவளி நல் வாழ்த்துக்கள்

குளிர்பான வகைகளை சுவைத்து மகிழ்ந்திட யாழ். நகரில் என்றும் நாட வேண்டிய இடம்

## ராஜா கிறீம் ஹவுஸ்

36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C-2561)

நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவி அனைவரும் சகல சௌபாக்கியங்கள் பெற்று வாழ எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

- அழகிற்கு மெருகூட்டும் அழகு சாதனப் பொருட்களா?
- எவர் சில்வர் பாத்திரங்களா?
- அலுமினியப் பாத்திரங்களா?
- பிளாஸ்ரிக் வகைகளா?

அனைத்தையும் மொத்தமாகப் பெற்றுக் கொள்ள

## கௌரி அழகு மாடம்

316, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(C-2558) ☏ 3227



# தீபாவளி சிறப்பு மலர்

## 14 - 11 - 2001



வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவர்க்கும்
எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

அதி நவீன மோஸ்தர்களில் தாலிக்கொடி, மோதிரம்
போன்றவற்றை 22 கரட்டில் செய்து தருபவர்கள்

**ஒலிம்பிக் நகைத் தொழிலகம்**

190|4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: ச. சந்திரசேகரம்
(சின்னமணி)

(C-2544)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும்
தமது தீபாவளி நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர்

ஸ்ரீ வாணி நகை மாடத்தினர்

எழில் குன்றா அழகிய தங்கப் பவுண் நகைகளுக்கு


**ஸ்ரீ வாணி நகை மாடம்**

173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-2543)

அனைவருக்கும் தமது தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றார்கள்!

**நிருத்திகா ஜுவல்லறி ஸ்தாபனத்தார்**

நங்கையர் மனம் மயங்கும் மங்காத அசல் 22 கரட்
தங்க நகைகளின் சொர்க்கபுரி



**நிருத்திகா ஜுவல்லர்ஸ்**

177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 2694 (C-2547)

பாரெல்லாம் பரந்து வாழும் எம் இன மக்கள் அனைவருக்கும்

**தீபாவளி வாழ்த்துக்கள்!**

மென்மைக்கு மெருகேற்றும் இளமைக்கு எழிலூட்டும் தங்க ஆபரணங்களுக்கு



**நியூ நகுலா ஜுவல்லறி**

74. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-2539)

**நகுலா நகை மாடம்**
241. G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவி அனைவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ
தமது தீபாவளி நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர்

**நியூ ராதிகாஸ் ஸ்தாபனத்தார்**

★ தங்க நகை உலகில் மங்காப் புகழ் பெற்றவர்கள்
★ தமக்குத் தாமே நிகரென நிற்பவர்கள்
★ நாளைய நாகரிகத்தை இன்றே அறிமுகம் செய்பவர்கள்

**நியூ ராதிகாஸ் நகை மாளிகை**

189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-2546)

# தீபாவளி சிறப்பு மலர்

## 14 - 11 - 2001


அனைத்து நெஞ்சங்களுக்கும் இனித்திடும் **தீபாவளி நல் வாழ்த்துக்கள்!**

கட்டடங்களுக்குத் தேவையான தரம் வாய்ந்த அனைத்து பொருட்களையும் ஒரிடமாகப் பெற்றுக் கொள்ள...

**பாக்கியரத்தினம் காட்வெயர் ஸ்ரோஸ்**

பிரதான வீதி, சங்கானை.

Phone: 070-212713

இணையகம்: **தரன் ரேடேர்ஸ்**

130, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Phone: 021-2664

(C-2545)

அனைத்து நெஞ்சங்களுக்கும் எரிக்கணேஷின் தித்திக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

★ உங்கள் கண்களைப் பரிசோதித்து அழகு நிறைந்த கண்ணாடி பெற்றுக் கொள்ள ..

★ உங்கள் அழகை மேன்மேலும் மெருகூட்ட, முகப் பொலிவு பெற சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ள...

★ மிதப்புப் பற்களுக்கு கிளிப்போட்டுக் கொள்ள...

இன்றே நாடுங்கள்!

**எரிக் கணேஷ்**



564. 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

91, கே. கே. எஸ் வீதி, கொக்குவில்.

80, பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம்.

(C-2548)

துன்பங்கள் நீங்கி இன்பங்கள் சூழ சாரங்காவின்

**இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!**

★ காலத்துக்குக் காலம் ஈடு இணையற்ற டிசைன்களில் தங்க நகைகளைப் பெற்றிட...

★ 22 கரட் தங்க நகைகளை குறித்த தவணையில் பெற்றிட...

**சாரங்கா நகை மாடம்**

177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

PHONE-FAX: 021 - 2480

தலைமையகம்: அருள் முருகன் நகையகம்

96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளையகம்: சாரங்கன் நகை மாடம் அன் சென்ரர்

45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C-2551)

அனைத்து நெஞ்சங்களுக்கும் எம்மினிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

★ ஐஸ்கிறீம் வகைகள் ★ குளிர்பான வகைகள் ★ மற்றும் சிற்றுண்டி வகைகளுக்கு

**கல்யாணி கிறீம் ஹவுஸ்**

73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C-2550)

# தீபாவளி சிறப்பு மலர்
## 14 - 11 - 2001


அனைவருக்கும் எமது தீபத் திருநாள் நல் வாழ்த்துக்கள்!

★ ரி. வி. வகைகளா?

★ றேடியோ வகைகளா?

★ அன்ரனா வகைகளா?

மற்றும் சகல விதமான எலெக்ரோனிக் வகைகளுக்கும்

**மாருதி வர்த்தக நிலையம்**

16 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[C-2554]

அனைவருக்கும் எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

அசல் 22 கரட் தங்க நகைகளை குறித்த தவணையில் செய்து தருபவர்கள்

**பிரசாத் நகை அகம்**

177 GN, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(வின்சர் தியேட்டர் முன்பாக)

[C-2553]

அன்பு நெஞ்சங்கள் அனைவர்க்கும் தமது தீபாவளி நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறார்கள்.

சாருணி ஜுவல் கட்டிங் ஸ்தாபனத்தார்

**சாருணி ஜுவல் கட்டிங் வேக்**

இல.70, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

[C-2552]

அனைவருக்கும் எமது இதயபூர்வமான தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

★ காலம் பொன் போன்றது.

★ நேரம் அனைவருக்கும் முக்கியமானதே அருமையான அந்த நேரத்தை உங்களுக்கு சரிசெய்து கொடுக்க இதோ!

**சிவாஸ் மணிக்கூட்டுத் தொழிலகம்**

24, முனீஸ்வரன் வீதி யாழ்ப்பாணம்.

★ சகல விதமான மணிக்கூடுகளும் திருத்திக் கொடுக்கப்படும்;

★ சகல விதமான (மணிக்கூட்டுக்கான) பற்றறிகளும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

(C-2556)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

இனிய தீபத் திருநாள் வாழ்த்துக்கள்!

கலைநயம் மிக்க தங்க நகைகளை வடிவமைப்பதில் முன்னோடியாகத் திகழ்பவர்கள்.

**உதயகதிரவன் நகை மாடம்**

172, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[C-2549]

அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எம் தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

- அசல் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள...
- குறித்த தவணையில் ஓடர் நகைகளைப் பெற்றுக் கொள்ள...

**ஜெயகிருஷ்ணா ஜுவல்லர்ஸ்**

158, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(c-2555)

எம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட

★ ஸ்கேட்டன் பிளவுஸ் வகைகளா?

★ சாறி வகைகளா?

★ சேட் வகைகளா?

★ றவுசர் வகைகளா?

அனைத்திற்கும்

**பாத்திமாஸ் ரெக்ஸ் ரைல்ஸ்**

100, மின்சார நிலைய வீதி, பெரியகடை,

யாழ்ப்பாணம்.

(C-2554)

# தீபாவளி சிறப்பு மலர்

## 14 - 11 - 2001

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
**எம் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!**
★ வாசனைத் திரவியங்கள் ★ கேக், குளிர்பானங்கள் தயாரிப்பதற்கான பொருட்கள்
★ ஆயுள் வேத மருந்துச் சரக்குகள் அனைத்திற்கும்

**ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசரீஸ்**

161A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2219 (C-2542)

அனைவருக்கும் இனிய தீபத் திருநாள் வாழ்த்துக்கள்!
★ மின்னிடும் பொன்னகைகளுக்கு மதனா
★ அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு மதனா
★ மங்கையர் மயங்கும் நவீன டிசைன்களுக்கு மதனா

**மதனா ஜுவல்லறி**

177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**மைதிலி ஜுவல்லறி**

190 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C-2541)

எல்லோருக்கும் ஜெசிபாவின் தீபாவளி நல் வாழ்த்துக்கள்!
**மிற்சுயி (MITSUI), அட்லஸ் (ATLAS) சீமெந்து வகைகளின்**
யாழ். குடா நாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்

**ஜெசிபா ஏஜென்சி**

***Jeisheba Agency***

132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Phone: 2407 Fax: 2140
(C-2540)

அனைவருக்கும் வினோவின் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்!



★ மங்கையர் மயங்கும் தங்க நகைகளின் பூங்கா வினோ
★ 22 கரட் தங்க நகைகளின் பூங்கா வினோ
★ நவநாகரிக தங்க நகைகளின் பூங்கா வினோ

**வினோ நகைப் பூங்கா**

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-2538) T. P. FAX: 2824

# தீபாவளி சிறப்பு மலர்

## 14 - 11 - 2001


அலைந்திடும் மக்கள் அமைதி பெற்றிட எம்மினிய தீபாவளி வாழ்த்துக்கள்!
கட்டடப் பொருட்கள், ICI பெயின்ற் வகைகள், இரும்புப் பொருட்கள்
அனைத்திற்கும்

**கஜமுகன் ஹாட்வெயர்**

**147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
தொலைபேசி 2833
(C-2566)

அன்பு நெஞ்சங்களுக்கு எம்மினிய **தீபாவளி நல் வாழ்த்துக்கள்!**
அழகிய கலை நயம்
எழிலுறு தொழில் வளம்
உயர் தரமிகு தங்க நகைகளுக்கு...!

**தயா நகைப் பூங்கா**

**THAYA NAKAI POONKA**

**213 C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
(C-2565)

**அனைவரது உள்ளங்களிலும் அமைதி நிலவிட**
அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவர்க்கும்
தமது தீபாவளி நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர்

**சுந்தர்சன் ஸ்தாபனத்தார்**

★ மின்சார உபகரணங்கள்
★ மின் நீர் இறைக்கும் இயந்திரங்கள்
★ மின் அலங்கார உபகரணங்கள்
★ மின் அழுத்திகள், மின் விசிறிகள்
★ மின் அடுப்புகள், றைஸ் குக்கர்கள்
★ மின் குமிழ்கள், மின் இணைப்புப் பொருட்கள்
★ மின்சாரத்தில் இயங்கும் சமையலறை உபகரணங்கள்

மற்றும்

★ பி. வீ. சி. நீர்க் குழாய்கள், அதன் இணைப்புகள்
★ பீலி வகைகள், அதன் இணைப்புகள்
★ மின்சாரத்தில் இயங்கும் அன்பளிப்புப் பொருட்கள்

**அனைத்தையும் ஒரே இடத்தில் நிதானம், நியாயம், உத்தரவாதத்துடன்**
**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளக் கூடிய**
**ஒரே ஸ்தாபனம்!**

**சுந்தர்சன்**

**மத்திய சந்தை முன்பாக, பிரதான வீதி,**
**மானிப்பாய்.**
**தொலைபேசி: 2751 பக்ஸ்: 2751**
(C-2562)

# தீபாவளி சிறப்பு மலர்
## 14 - 11 - 2001


மலரும் தீபாவளி அனைவருக்கும் மகிழ்ச்சியைக்
கொண்டுவர பிரார்த்திக்கின்றோம்.

மங்கையர் மயங்கும் ஜவுளிகளின் எழில்மிகு காட்சியகம்!

**மங்கை சில்க்ஸ்**

**MANGAI SILKS**

இல, 8, நவீன சந்தை, சுன்னாகம்.
(சி 2564)


### தீபாவளியே வருக

அன்பு மலர் அள்ளி வீசுகிறோம்!
மனதில் உனை நினைத்து அழைக்கின்றோம்!
நாமிங்கு சேர்ந்து பாடி வாழ்த்துகிறோம்!
எமைப் பார்க்க தீபாவளியே வருக! நீயும்

அல்வாய் கேசவரூபன்

### நெஞ்சில் தீ ஏந்தி வா!

சீர் கொண்டுவா தீபாவளியே! தமிழன்
சிந்தை மகிழ்ந்து வாழ்வதற்கு
போர் மேக இருளகற்றிடவும் - நெஞ்சிலே
தீச்சுடர் ஏந்தி வா!
போர்க்கருவி வேண்டாம் எமக்கு - ஒரு
எழுது கருவி கொண்டுவா!
ஏர்பிடித்த கையால் - இன்றே
எழுதுவோம் புதியதொரு வரலாற!

எம். சுயன்
கோண்டாவில்


அனைத்து நெஞ்சங்களுக்கும் துர்க்கா நகைப் பூங்காவின்
இனித்திடும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!

கலைநயம் மிக்க தரமான தங்க நகைகளின் பூங்கா

**துர்க்கா நகைப் பூங்கா**

71, கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C-2568) தொலைபேசி: 2228

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், வர்த்தகப் பெரு மக்கள் அனைவருக்கும்
எம் இதயம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்:

**இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்**

50, 52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-2569) PHONE: 2988 FAX: 2368

அனைவருக்கும எமது தீபாவளி நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

**குகன் களஞ்சியம்**

180, (380), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C-2567) தொலைபேசி: 2767

வாடிக்கையாளர்கள், அன்பர்கள் யாவருக்கும் எம் தீபாவளி நல் வாழ்த்துக்கள்.

★ முகூர்த்தப் பட்டுப் புடைவைகள்
★ நங்கையர் மயங்கும் ஆடைகள்
★ ஆண்களுக்கான ரெடிமெட் ஆடைகள்
அனைத்திற்கும்

**ரவி அன் ராஜ் சில்க்ஸ்**

இல. 77, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(C-2570) T. P. 2469

# உளவியல் ஆற்றுப்படுத்தல் உதவியாளரைப் பயிற்றுவிக்கும் 3 நாள் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

சர்வோதய நிறுவனத்தின் ஏற்பாட்டில் "போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான உளநல பாதிப்பை குறைப்பதற்கான" செயற்திட்டத்தில் ஆற்றுப்படுத்தும் உதவியாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான பயிற்சிப் பட்டறை ஒன்று கடந்த சனி, ஞாயிறு திங்கள் ஆகிய மூன்று நாட்களிலும் சுண்டுக்குளியில் அமைந்துள்ள சர்வோதய மாவட்ட நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

யுனிசெவ் ஆதரவில் சாந்திக உளவியல் பயிற்றுவிப்பாளர்கள் இப் பயிற்சிகளை வழங்கினர். சிறுவர்களின் தேவைகளை இனங்கண்டு செயல்முறை உதவிகள் வழங்குவது தொடர்பான நுட்பங்களை உள்ளடக்கிய மேற்படி பயிற்சிப் பட்டறையில் பாலர் பாடசாலை ஆசிரியர்கள், கிராம மட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட உதவியாளர்கள் உள்ளடங்கலாக 34 பேர் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சிப் பட்டறையில் சிறுவர் தொடர்பான பயிற்சியை பெற்றுக் கொண்ட மேற்படி 34 பேரும் தொடர்ந்துகிராமமட்டத்தில் சிறுவர் நல செயற்பாடுகளில் ஈடுபடுத்தப் படுவார்கள் என சர்வோதய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(செ-27)

# ஊர்காவற்றுறையில் தலைமைத்துவ பாசறை

(வல்வெட்டித்துறை)

போரூட் நிறுவனத்தின்ஏற்பாட்டில், ஊர்காவற்றுறையில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை கிராம மட்டக் குழுக்களின் தலைவர்களுக்கானதலைமைத்துவ பயிற்சிப் பாசறை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தலைமைத்துவத்தின் முக்கியம், வகைகள், தலைமைத்துவத்தால் ஏற்படும் பயன்கள், தலைமைத்துவத்தைமேற் கொள்வதற்கான பண்புகள், தலைமைத்துவத்திற்கு முகம் கொடுப்பதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றை எதிர் கொள்வதற்கான வழிமுறைகள் ஆகிய ஃ பற்றியும் பயிற்சி வழங்கப்படவுள்ளன.

(செ-217)

## வலம்புரி நடத்தும் சிறுகதைப் போட்டிக்கு

கதைகள் அனுப்ப வேண்டிய இறுதி நாள்

**28- 11- 2001**

சமகாலத்தையொட்டிய கருப்பொருளில் 5 பக்கங்களுக்கு மேற்படாமல் கதைகள் எழுதப் படவேண்டும். (ஆ-ர்)

# ஐ.தே.க.வுக்கு ஆதரவாக லக்ஸ்மனின் மனைவி தேர்தல் பிரசாரம்

(கொழும்பு)

பொ.ஐ.மு. முன்னாள் அமைச்சர் லக்ஸ்மன் ஜயக்கொடியின் மனைவி பமித்தா ஜயக்கொடி கம்பஹா மாவட்டத்தில் ஐ.தே.மு வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரசாரம் செய்யவுள்ளார்.

லக்ஸ்மன் ஜயக்கொடி அமைச்சராகவிருந்த காலத்தில் அவரது அந்தரங்கச் செயலராகவிருந்தபமித்தா ஜயக்கொடி சேவா வனிதா பெண்கள் அமைப்பின் முக்கிய உறுப்பினராகவும்இருந்தார்.

(உ)


யாழ்.பல்கலைக்கழக அனுசரணையுடன் நடத்தப்பட்ட யாழ். மத்திய கல்லூரி முறைசாராக் கல்விப்பிரிவு மாணவர்களுக்கான நூலகவியல் பயிற்சி நெறி நிறைவையொட்டி வழங்கப்படும்

**சான்றிதழ் வைபவம்**

இடம்:- யாழ்.மத்திய கல்லூரி காஸ்மண்டபம்

காலம்:- 16.11.2001 வெள்ளிக்கிழமை காலை 10.30

தலைவர்:- கை.சிவரத்தினம் (முறை சாராக் கல்விப் பிரிவு)

பிரதம விருந்தினர்:- திரு.பொன். பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்:- திருமதி. ரோகினி பரராஜசிங்கம் (பிரதம நூலகர் யாழ். பல்கலைக்கழகம்)

தொடர்புடைய அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

அதிபர் பொறுப்பாளர்

க. இராசதுரை கை. சிவரத்தினம்

(இ/2873)



# வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்

# அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் 2001

எமது பிரதேசத்தின் வளர்ச்சி கருதி அபிவிருத்தி புனரமைப்புப் பணிகளுக்காக, எமது சபையினால் இவ்வருடத்தில் சபை நிதியிலிருந்து ஒரு கோடியே இரண்டு இலட்சத்து முப்பத்தாறாயிரம் (10236000 ) ரூபாவிற்கு செய்யப்பட்ட, செய்து கொண்டிருக்கின்ற செய்யத்தொடங்கும் வேலைகளையும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து (டி.சி பி.) செய்யப்படுகின்ற, பத்து இலட்சத்து எண்பத்தையாயிரம் (1085000/-) ரூபா வேலைகளையும் அனைத்து மக்களுக்கும் தெரியப்படுத்த விரும்பி உங்கள் முன் வைக்கின்றோம், எதிர் வரும் காலங்களில் மிகுதி வேலைகளையும் செய்வதற்கு வரியிறுப்பாளர்களாகிய உங்கள் பூரண ஒத்துழைப்பினையும், ஆதரவினையும் நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| சபை வேலைகள் | வேலை விபரம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. புகையிரத நிலைய கிழக்கு வீதி, | சுன்னாகம் | 565000 00 |
| 2. ஏழாலை ஆயுர்வேத வைத்தியசாலை பிரிவிடுதல் வேலை | | 80000 00 |
| 3. சுன்னாகம் சந்தை வெற்றிலைக்கொட்டகை புனரமைப்பு | | 35000 00 |
| 4. சுன்னாகம் பொது நூலகத்திற்கு துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் நிர்மாணித்தல் | | 85000 00 |
| 5. ஏழாலை பொது நூலகத்திற்கு அலுமாரி செய்தல் | | 17450 00 |
| 6. கலைவாணி சனசமூக நிலைய குழாய்க்கிணறு திருத்தம் | | 8000 00 |
| 7. ஏழாலை உபஅலுவலக எல்லைச்சுவர் அமைத்தல் | | 210000 00 |
| 8. அலுவல, நூலக கதிரைகள் செய்தல் | | 50000 00 |
| 9. ஈவினை கற்பகவிநாயகர் வீதி மின் இணைப்பு | | 250000 00 |
| 10. வெட்டுக்கட்டைப்பிள்ளையார் கோவில் வீதி | | 900000 00 |
| 11. கலைவாணிசனசமூகநிலைய பாலர்பாடசாலை குழாய்க்கிணறு அமைத்தல் | | 21000 00 |
| 12. கலாஜோதி சனசமூகநிலைய குழாய்க்கிணறு திருத்தம் | | 9000 00 |
| 13. மல்வம் கொல்களம் திருத்தம் | | 6750 00 |
| 14. மாருட்டி வீதி | | 102000 00 |
| 15. சுன்னாகம் சிவன் முன்பள்ளி குழாய்க்கிணறு திருத்தம் | | 21000 00 |
| 16. ஸ்ரீ அம்பாள் சனசமூக நிலையத்திருத்தம் | | 30000 00 |
| 17. சபாபதிப்பிள்ளை வீதி-பொதுக்கிணறு அமைத்தல் | | 140000 00 |
| 18. சுன்னாகம் மத்தியசந்தை பராமரிப்பு வேலை | | 249000 00 |
| 19. கற்பகவிநாயகர் வீதி ஈவினை | | 665000 00 |
| 20. பொது நூலகங்களுக்கு தொலைக்காட்சிப்பெட்டி வழங்குதல் | | 150000 00 |
| 21. புகையிர நிலைய கிழக்கு வீதி தொடர் வேலை | | 145000 00 |
| 22. உடுவில் 1 ஆம் கட்டை வீதி | | 210000 00 |
| 23. ஈவினை திடற்புலம் வீதி | | 290000 00 |
| 24. ஏழாலை மத்தாளோடை வீதி | | 380000 00 |
| 25. இணுவில் மத்தியகல்லூரி முன்வீதி | | 535000 00 |
| 26. இணுவில் பத்தானை வீதி | | 465000 00 |
| 27. ஏழாலை அறிவொளி சனசமூகநிலைய வீதி | | 450000 00 |
| 28. சுன்னாகம் ஐயனார் கோவில் வீதி | | 285000 00 |
| 29. உடுவில் முருகமூர்த்தி கோவில் வீதி | | 250000 00 |
| 30. ஏழாலை சிவகுரு வீதி | | 260000 00 |
| 31. ஏழாலை தச்சக்கடவை வீதி/சிவன் வீதி | | 310000 00 |
| 32. பழைய பொலிஸ்நிலைய வீதி | | 475000 00 |
| 33. உடுவில் அம்பாள் வீதி | | 160000 00 |
| 34. உடுவில் மதுவளை வீதி | | 185000 00 |
| 35. உடுவில் இராமலிங்கம் வீதி | | 160000 00 |
| 36. இணுவில் துரைவீதி கிளை ஒழுங்கை | | 125000 00 |
| 37. மயிலணி மாம்பலகை வீதி | | 240000 00 |
| 38. ஏழாலை தம்புவத்தை வைரவர் வீதி | | 72000 00 |
| 39. சொத்திய வத்தை விவசாய வீதி | | 40000 06 |
| 40. கீளிச்சந்தை வீதி புனரமைப்பு | | 135000 00 |
| 41. தேவராணை வீதி, சுன்னாகம் | | 230000 00 |
| 42. வெள்ளவாய்க்கால் வீதி | | 335000 00 |
| 43. ஏழாலை சேமக்காலை வீதி | | 55000 00 |
| 44. புகையிரத நிலைய வீதி, கட்டம் 2. | | 525000 90 |
| 45. உடுவில் மகளிர் கல்லூரி வடக்கு வீதி | | |
| 46. புன்னாலைக்கட்டுவன் தம்பிப்பிள்ளை மணியகாரன் வீதி | | |
| 47. சங்குவேலி பிள்ளையார் கோவில் வீதி | | |
| 48. ஆலடி சந்தை புனரமைப்பு | | |
| 49. ஏழாலை கலாநிதி வீதி | | |

## வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டு வேலை. (டி. சி. பி)

| சபை வேலைகள் | வேலை விபரம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 50. முடவேம்படி வெள்ளவாய்க்கால் வீதி | | 150000 00 |
| 51. சுன்னாகம் புனித அந்தோனியார் குறுக்கு வீதி | | 100000 00 |
| 52. தாவடி தெற்கு பத்தானை வீதி | | 100000 00 |
| 53. மயிலணி கந்தசாமி கோவில் வீதி | | 50000 00 |
| 54. சுன்னாகம் மின்சாரநிலைய வீதி | | 50000 00 |
| 55. இணுவில் மேற்கு அண்ணா சனசமூகநிலைய வீதி | | 100000 00 |
| 56. சுன்னாகம் ஐயனார்கோவில் வீதி, மகாகாளி அம்பாள் கோவில் வீதி | | 100000 00 |
| 57. தாவடி வடக்கு இந்துமயான வீதி | | 65000 00 |
| 58. தாவடி தெற்கு பாடசாலை வீதி | | 40000 00 |
| 59. இணுவில் செட்டி வீதி | | 40000 00 |
| 60. இணுவில் அண்ணா முன்பள்ளிக்கு தளபாடக்கொள்வனவு | | 30000 00 |
| 61. மயிலங்காடு ஸ்ரீ முருகன் முன்பள்ளிக்கு தளபாடக் கொள்வனவு | | 30000 00 |
| 62. ஈவினை கலைபரசி முன்பள்ளிக்கு தளபாடக்கொள்ளவனவு | | 30000 00 |
| 63. ஈவினை கற்பகவிநாயகர் சனசமூகநிலைய முன்பள்ளிக்கு புதிய கட்டிடம் அமைத்தல் | | 50000 00 |
| 64. மயிலணி வளர்பிறை முன்பள்ளிக்கு தளபாடக்கொள்வனவு | | 25000 00 |
| 65. மயிலங்காடு ஸ்ரீ முருகன் முன்பள்ளி புனரமைப்பு | | 50000 00 |
| 66. தாவடி தெற்கு ஸ்ரீ காளிபம்பாள் முன்பள்ளிக்கு தளபாடக்கொள்வனவு | | 25000 00 |
| 67. இணுவில் சிவகாமசுந்தரி முன்பள்ளிக்கு புத்தகம் கொள்வனவு | | 50000 00 |

என்றும் மக்களுடன்

**க.கமலசேகரன்(ஜே பி.யு.எம்)**

தலைவர்,

வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

(சி/2870)

# கணக்காய்வாளர் நேர்முகத்தேர்வு
## யாழில் 14 பேருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கணக்காய்வாளர் போட்டிப் பரீட்சைக்கு யாழ் மாவட்டத்தில் இருந்து தோற்றியவர்களில் 14 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 19, 21, 23, ஆம் திகதிகளில் கொழும்பில் உள்ள நிதி திட்டமிடல் அமைச்சு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களுக்கான அழைப்பிதழ் கடிதங்கள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும்;

கிடைக்கப்பெறாதோர் யாழ். கல்வி வலயத்தின் கணக்காளரை அலுவலக நாட்களில் சந்தித்து மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)


## கட்டிட திருத்தத்திற்கான கூறுவிலை கோரல்

01. தச்சுவேலை 02 மேசன்வேலை
03. சுண்ணாம்பு வெள்ளை பூசுதலும், தீந்தை பூசுதலும்.

மேற்படி வேலைகளை கூலி ஒப்பந்த அடிப்படையில் செய்து வழங்கக்கூடியவர்கள் தங்கள் விண்ணப்பங்களை கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு 20/11/2001 ம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்கவும் வேலைகள் தொடர்பான விபரங்களை அலுவலக நேரத்தில் பார்வையிட்டுக் கொள்ளலாம்.

தலைவர்
யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

இருபாலை வீதி,
கோண்டாவில்.

(3961)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## பட்டச் சான்றிதழ்கள் வழங்கல்

1. கலைமாணி / வணிகமாணி - 1998
2. கலைமாணி / வணிகமாணி - 1999
3. சிறப்புக் கலைமாணி - 1998
4. நுண்கலைமாணி - நடனம் / சங்கீதம் - 1998

மேற்படி பட்டக் கற்கை நெறிகளில் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ்கள் 30-11-2001 அன்று மு. ப. 10-00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் வழங்கப்படும்.

மேற்படி பட்டச் சான்றிதழ் கட்டணமாக 200/-ஐ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டு வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் 23-1 -2001க்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

யாழ். பல்கலைக்கழகம். பதிவாளர்

(கி-2869)


## நினைவு அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதியும் பேராசிரியருமான அமரர் செ பாலச்சந்திரன் அவர்களின் 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி நிகழ்வு வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-2)

## இராசிபலன்

14/11/2001
ஐப்பசி 28 புதன்
சதுர்த்தசிபிூப - 2:38வரை
சுவாதி மு இ - 9 38 வரை
இராகுகாலம்
சுபநேரம்
அமாவாசை விரதம்,
தீபாவளி,
கேதாரகௌரி விரதம்

**மேடம்**
கௌரவம், திடீர்பயணம், காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை.

**இடபம்**
வாக்குமேன்மை, காரிய நன்மை, தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி.

**மிதுனம்**
வியாபார நன்மை, முயற்சி தாமதம், ரோகம், புத்திரரால் கவலை;

**கடகம்**
எடுத்த காரியம் தாமதம், உடல் நலக் குறைவு, கல்வி மேன்மை, பிரயாணம்.

**சிங்கம்**
இனிய சம்பவம், கூட்டு முயற்சி, காரிய அனுகூலம், தனவரவு;

**கன்னி**
மாதர்நட்பு, குடும்பசுகம், முயற்சி தாமதம், வார்த்தை செல்லாமை;

**துலாம்**
புதிய பொருட் சேர்க்கை, பெரியோர் மதிப்பு, காரிய அனுகூலம், உடல் நலம்:

**விருச்சிகம்**
பிரயாணம், சுப செலவு, மனக்கிலேசம், போசனசுகம்;

**தனுசு**
நினைத்த காரியம் கைகூடும், குடும்ப நன்மை, கௌரவம், உறவினர் சந்திப்பு.

**மகரம்**
அதிகாரம், அதிக பிரயாசை, சுப நிகழ்வு, காரிய நன்மை;

**கும்பம்**
மனச்சஞ்சலம், உடல்நலக் குறைவு, நிலை மாற்றம், காரிய தாமதம்;

**மீனம்**
எதிர்பாராத பிரச்சினை, பிரயாண பயம், காரியத் தடங்கல், உடல் சோர்வு;

(பழைய நேரப்படி கணிப்படப்பட்டது)

வளவன்

## விளையாட்டு செய்திகள்

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

வல்வெட்டித்துறை

நல்லூர் நொதேர்ண் விளையாட்டுக்கழகம் நடத்தும் "பரா - பரம்" வெற்றிக் கிண்ணத்திற்கான மென்பந்து கிரிக்கெட் இரண்டாவது சுற்றுப் போட்டியில் இன்று மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு;

காலை 8 30 மணிக்கு காளிகோயில் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து லெவன்ஸ்ரார் விளையாட்டுக்கழகமும்,

மு. ப 10.00 மணிக்கு அரியாலை ஐக்கியம் (சிவப்பு) விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விநயாகர் விளையாட்டுக்கழகமும்,

மு ப 11. 30 மணிக்கு கே. சீ. சீ. சீ. விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கே. எம். எஸ். சீ. விளையாட்டுக்கழகமும்,

பி ப. 1.30மணிக்கு கே சீ. சீ, சீ விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நொதேர்ன் விளையாட்டுக்கழகமும்,

பி. ப. 3. 00 மணிக்கு சீகொக்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விக்றி விளையாட்டுக்கழகமும் பி. ப. 4 00 மணிக்கு ரீ சீ. எஸ். சீ. விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ரீ. வை. எம். எச். ஏ. விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (செ-217)

## தீபாவளி விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் தீபாவளி விளையாட்டுப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

காலை 7. 00 மணிக்கு மரதன் ஓட்டப் போட்டியும், மாலை கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் தடகள விளையாட்டுப் போட்டியும்இடம்பெறும் (எ-9)

## ஊழலைத் தடுக்க கிரிக்கெட் வீரர்கள் தங்கும் அறைகளில் கமரா

(கோலாலம்பூர்)

கிரிக்கெட்விளையாட்டில் இடம்பெறும் ஊழலைதடுப்பதற்குபுதிய திட்டம் ஒன்றை சர்வதேசகிரிக்கெட்சம்மேளனம்அமுல்ப்படுத்தவுள்ளது.

மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்தின் கூட்டத்திலேயேஇம் முடிவு எடுக்கப்பட்டது.

புதிய திட்டத்தின்படி கிரிக்கெட் வீரர்கள் தங்கும் விடுதி அறைகளில் வேவு பார்க்கும் புகைப்படக் கருவிகள் பொருத்தப்படவுள்ளன.

இத்திட்டம் முதல் தடவையாக அடுத்த ஆண்டு இந்திய அணியின் இங்கிலாந்து பயணத்தின் போதுநடைமுறைப் படுத்தப்படவுள்ளது. (உ-2)


## யாழ்ப்பாணம் மாநகராட்சிமன்றம்
## வரவு செலவுத் திட்டம்-2002

2002 ம்ஆண்டுக்குகிடைக்கக்கூடியமாநகர வருமான மதிடபீட்டையும் உத்தேச செலவின விபரங்களையும் உள்ளடக்கிய யாழ். மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுத்திட்டம் 2001 ம் ஆண்டு நவம்பர் மாதம் 15ம் திகதி தொடக்கம் ஏழு நாள்களுக்கு மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தி.252), (212)பி பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது;

இ. இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்

(C/2872)



# சம்பந்தர் மருத்துவமனை
## 60, அரசடி வீதி, யாழ்ப்பாணம்

★ வார்ட் (WARD) வசதிகள்
★ O.P.D. (வெளிநோயாளர் சிகிச்சை காலை 8 மணி முதல் இரவு 9 மணிவரையும்
★ வைத்திய நிபுணர்கள்சேவை (Specialist Consultation) மாலை 4 மணிக்குப்பின்
★ E.C.G., NEBULIZER (ஆஸ்த்மாவுக்கு புகை பிடித்தல்)
★ வார்ட்டில் தங்கும் நோயாளர்களை வைத்திய நிபுணர்கள் (Specialist) பார்வையிடுவர்.

**விசேடமாக**

முதியோர்கள் வைத்தியம், உணவு ஆகியவற்றுடன் கூடிய பராமரிப்பு
நோய் உள்ள முதியோர்கள்
நோய் அற்ற முதியோர்கள்
இரு பாலாரும் அனுமதிக்கப்படுவர்.

மேலதிக விவரங்களுக்கு

**SAMPANTHAR MODERN HEALTH CARE**

No. 60, ArasadyRd. (Near Thaddatheru Junction) JAFFNA. (C-2851)

வானுயர் தோற்றம் எவன் செய்யும் தன் நெஞ்சம்
தான் அறி குற்றப்படின்

குறள்

# வலம்புரி

## சோகத்தில் தெரியாத தீபம்

இன்று தீபாவளிப் பண்டிகை, தீபங்கள் ஏற்றி, இறைவனை வழிபட்டு புத்தாடை உடுத்து உறவுகளோடு சேர்ந்து உண்டு உவகையுறும் நாள், ஒரு புறத்தில் சிறுவர்கள் பட்டாசு கொளுத்தி, ஆர்ப்பரிக்கும் அகமகிழ்வில் நிலமகள் ஆனந்தம் கொள்வாள். இவை ஒரு காலத்தில் ஈழத் தமிழ் மக்கள் தீபாவளியை அனுஷ்டித்த வகை, இன்று அப்படியல்ல. பட்டாசு கொளுத்திக் குதூகலித்த சிறார்கள் மூலைக்குள் குந்தியிருக்கிறார்கள். காரணம் தான் என்னே! ஓடித்திரிந்த நிலமகளில் ஒளிந்திருந்த மிதிவெடி அவர்களின் பாதங்களைப் பதம் பார்த்த சோகம், அவர்களின் முகத்தில் இன்னமும் விலகவில்லை.

ஏக்கப் பார்வையுடன் எதிர்கால இருளில், தீபத் திருநாள் தெரிவது அவர்களுக்குக் கடினமே. இது ஒருபுறம் மறுபுறத்தில் தீபாவளிப் பண்டிகைக்காக, தீபம் ஏற்றி, கோலம் இட்டு, அறுசுவை உண்டி செய்த அன்னை, தாம் குடியிருந்த வீடு குண்டினால், குலைந்து போன செய்தி கேட்டு குடிசைக்குள் கண்ணீர் விட்டு, தோள் புயத்துணியால் துடைக்கின்ற பரிதாபம், தீபாவளித் திருநாள் கால அசைவினில் வந்து போயினும், இருள் புகுந்த உள்ளத்திற்கு தீபம் ஏது? இவற்றோடு நிறுத்தி விட நம் நாடு, புனிதர்களின் பூமியல்லவே, காணாமல் போன மகனை, வான் தாக்குதலுக்கு இரையாகிய கணவனை, இடம் பெயர்வில் கடல் கடந்து போய், இதுவரை கரை சேராத உறவுகளை எண்ணினால் தீபத்திருநாளில், நீள்விழிகள் ஈரமாவதைத் தவிர ஒளிமயம் தெரியப் போவதில்லை.

இவை ஒரு பகுதி தமிழ் மக்களின் நிலை, இவ்வாறு ஒரு பகுதியினர் கலங்கிக் கொண்டிருக்க, இன்னோர் பகுதி தீபாவளிப் பண்டிகையை, மதுப் போத்தலுடனும், மாமிசத்துடனும் கொண்டாடப் போகின்றனர். இதில் இளவல்களின் சேட்டைகள்- அட்டகாசங்கள், எல்லைமீறும். பணத்தின், அளவு கடந்த கிடைப்பனவே இதற்குக்காரணமாகும்.

தமிழ்மக்களின் உரிமைக்காக ஒரு புறத்தில், போராட்டம் நடைபெற மறுபுறத்தில் இன்னோர் சாரார்பிறர்துன்பம்பாரா நிலையில் எனில் போராட்டம் என்பது ஒரு சாராருக்குமட்டும்தானா என்று உள்ளம் ஏங்குகிறது.

# தொல்லியல் நோக்கில் ஈழத் தமிழர்களின் பண்டைய மதங்கள் பற்றிய ஆய்வு

## (8)

### கலாநிதி ப. புஷ்பரட்ணம்

தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்தில் கிடைத்த கி.பி. 2 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நாணயமொன்றின் முன்புறத்தில் மயில் சின்னமும், பின்புறத்தில் தமிழ்ப் பிராமி எழுத்தில் மகாசாத்தன் என்ற பெயரும் காணப்படுகின்றது. இந்நாணயம் இலங்கைத் தமிழரின் புராதன முருக வழிபாட்டுத்தலமான கதிர்காமம் அமைந்த வட்டாரத்தில் கிடைத்துள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. வட இலங்கையில் கந்தரோடையில் கிடைத்த இதே காலப்பகுதிக்குரிய இன்னொரு நாணயத்தின் முன்புறத்தில் ஸ்ரீவத்ஸாவும், பின்புறத்தில் மயில் சின்னத்துடன் தமிழ்ப் பிராமி எழுத்தில் உதி (ஹ)பன் என்ற பெயரும் காணப்படுகிறது.

இவற்றில் இடம்பெற்றுள்ள ஸ்ரீவத்ஸ, மயில் சின்னங்கள் நாணயங்களை வெளியிட்ட தமிழர்களின் சமய நம்பிக்கையைப் பிரதிபலிப்பதாகக் கொள்ளலாம். இதில்இடம் பெற்றுள்ள மயில் முருக வழிபாட்டை நினைவுபடுத்துகிறது. பண்டு தொட்டு முருகனுடைய வாகனங்களில் ஒன்றாக மயில் இருந்ததற்கு புறநானூறு (65:7-8), திருமுருகாற்றுப்படை (210), பரிபாடல் (18;26) கந்தபுராணம் (4:13,376-381) போன்ற தமிழ் இலக்கியங்களில் சான்றுகள் உள. இதனால் நாணயங்களில் இடம் பெற்றுள்ள மயில் சின்னம் அவற்றை வெளியிட்டவர்கள் முருக வழிபாட்டுடன் ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதைக் காட்டுவதாக எடுத்துக் கொள்ள இடமுண்டு. கி.மு. 2 க்கும் கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கைக்கேயுரிய தனித்துவமான நீள சதுர நாணயங்கள் புழக்கத்தில் இருந்துள்ளன. இவற்றில் ஓம் என்ற வேதமந்திரம், ஸ்ரீவத்ஸம், லக்ஷ்மி, யானை, தாமரை, சூலம், காளை, சிவலிங்கம் போன்ற சின்னங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றிலிருந்து இக்காலத்தில் இந்து மதத்திற்கும் நாணயங்களை வெளியிட்ட தமிழர்களுக்கிடையிலான நெருக்கமான உறவு தெளிவாகத் தெரிகிறது. இந்நாணயங்கள் சிலவற்றில் மயில் சின்னத்துடன் வேல, சேவல்போன்றசின்னங்களும் இடம் பெற்றுள்ளன. சமகாலத்தில் இவ்வாறான சின்னங்களுடன் முருகனைக் குறிக்கும் பெயர்களும் இந்திய நாணயங்களில் குறிப்பாகவட இந்திய நாணயங்களில் இடம் பெற்றுள்ளன. இதில் வரும் வேல் வெற்றிக் கடவுளான முருகனை 'வடிவேல்' (சிலப்பதிகாரம் 1;2,49-50), 'வெல்வேலான்' (கலித்தொகை மருதக்கலி 28:26) எனத் தமிழ் இலக்கியங்களில் அழைக்கப்பட்டதை நினைவுபடுத்துகிறது. சேவலை முருகனுடன் தொடர்புபடுத்துவது ஆரியக் கலப்பால் ஏற்பட்ட ஒன்று என்ற கருத்துக் காணப்பட்டாலும் அது பண்டு தொட்டு முருக வழிபாட்டுக்குரிய அடையாளமாகப் பார்க்கப்படுகிறது. முருக வழிபாட்டுடன் இணைந்த தொன்றாகக் கடம்பமர வழிபாடு விளங்கியது. இதன்காரணமாக முருகன் 'கடம்பமர்ந்த செல்வன்' எனப் பரிபாடலில் விளிக்கப்படுகிறான் (பரி8:126), லக்ஷ்மி உருவம் பொறித்த நாணயங்களில் குறிப்பாகப் பூநகரி, நிந்தவூர் ஆகிய இடங்களில் கிடைத்த நாணயங்களின் பின் புறத்தில் சுவஸ்தி காவுக்குப் பதிலாக வேலியிடப்பட்ட மரம் காணப்படுகிறது. இதில் வரும் வேலியிடப்பட்ட மரத்தை சங்க இலக்கியத்தில் வரும் முருகனுக்குரிய கடம்ப மரத்துடன் தொடர்பு படுத்திப் பார்க்கலாம். இதனால் மேற்குறிப்பிட்ட நாணயங்களில் வரும் இச்சின்னங்கள் முருக வழிபாட்டைக் குறித்ததெனக் கூறலாம். யாழ்ப்பாணக் கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி. 11 ஆம் நூற்றாண்டுக்குரிய முதலாம் இராசேந்திர சோழன் காலக் கல்வெட்டொன்று இங்கிருந்த (நல்லூர்?) ஆலயம் ஒன்றிற்குத் தானமளித்ததாகக் கூறுகிறது. அது முருகன் ஆலயமா என்பது ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டியுள்ளது.

#### முருகன்

இடைக் காலத் தமிழ்நாணயங்களில் வேல், மயிலசின்னங்களுடன் முருகனின் உருவமும் முருகனைக் குறிக்கும் பெயர்களும் இடம் பெற்றிருப்பது சிறப்பான அம்சமாகும். இதற்கு கி.பி. 13 ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி 17 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி புரிந்த மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களும், அக்காலத்திற்குரிய தெனக் கூறப்படும் வள்ளி, தெய்வானையுடன்கூடிய முருகன்சிலைகளும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். அவற்றுள் சிற்பங்களைக் காட்டிலும் நாணயங்களில் வரும் எழுத்துக்களும், சின்னங்களும் காலத்தைக் கணிப்பிட்டுக் கூறுவதில் நம்பகத்தன்மை வாய்ந்தவையாகும். இவர்களின் ஆரம்பகால நாணயங்கள் சிலவற்றின்முன் புறத்தில் மன்னன்உருவமும். பின்புறத்தில்நந்தியும்நந்திக்கு முன்னால் நந்தியைப்பார்த்த வண்ணம் சிறிய மயில் சின்னமும், நந்திக்கு கீழே தமிழில் ''சேது'' என்ற வாசகமும் காணப்படுகின்றன. இதில் நந்தி சிவனையும், மயில் முருகனையும் குறித்துநிற்பதாகக் கொள்ளலாம். இவைபண்டைய இலக்கியங்களில் சிவனுக்கும் முருகனுக்கும் இடையிலான உறவு தொடர்பாக வரும்கதைகளை நினைவுபடுத்துகின்றன இதை உறுதிப்படுத்தும் வகையில் சில நாணயங்களில் மயிலுக்கு பதிலாக நந்திக்கு முன்னால் முருகனின் உருவம் காணப்படுகிறது.

இக்கால மன்னர்கள் சேது வாசகத்துடன் முருகன் வழிபாட்டுடன் தொடர்புடைய ''கந்'' ''ஆ'' என்ற எழுத்துப் பொறித்தநாணயங்களையும் வெளியிட்டுள்ளனர்என்பதற்கான சான்றுகள் அண்மையில் எமது கள ஆய்வின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவை பெரும்பாலும் கி.பி. 14 ஆம் நூற்றாண்டுக்குப் பின் வெளியிடப்பட்டவை என்பதை அவற்றின் எழுத்தமைதி கொண்டு கணிப்பிட முடிகிறது. இதில் முதலாவது வகை நாணயங்களின் முன்புறத்தில் மேலே சந்திரனும், கீழே இடம் அல்லது வலப்புறம் பார்த்தநிலையில்மயிலும் காணப்படுகின்றன. அதன் வாயில் பாம்பும், சில நாணயங்களில் பல்லி போன்ற உருவமும் காணப்படுகின்றன. நாணயத்தின் பின்புறத்தில் வலப்புறமாக வேல் சின்னமும் மத்தியில் ''கந்'' என்ற பெயரும் அதனுடன் இணைந்த நிலையில் மனிதனைக் குறிக்கும் காலப்பகுதியும் காணப்படுகிறது. இரண்டாவது வகை நாணயங்கள் முதலாவது வகை நாயணயங்களைப் பெருமளவு ஒத்திருந்தாலும் மயிலின் வாயிலுள்ள பாம்பு தெளிவாக இருப்பதுடன், பின்புறத்தில் ''கந்'' என்ற பெயருக்குப் பதிலாக ''ஆ'' என்ற தனி எழுத்து மட்டும் காணப்படுகிறது.

#### கந்தன்

இதில் ''கந்'' ''ஆ'' என்ற எழுத்துக்கள் மனித உருவத்தின் தலைப்பகுதியைக் குறிக்கின்றன. இதனால் இவ்வுருவங்களை அவற்றை வெளியிட்ட மன்னர்களின் அல்லது முருகனின் உருவங்களாகஎடுத்துக்கொள்ளலாம். இவ்வகை அமைப்பில் நாணயங்கள் வெளியிடும் மரபு சமகாலத்தில் தமிழகத்திலும் இருந்ததற்குப்பலசான்றுகள் உண்டு. முருகனோடு தொடர்புடைய பாம்புடன் கூடிய மயில், வேல் என்பவற்றோடு ''கந்'' என்றபெயரை நோக்கும் போது அது முருகனைக் குறிக்கும் 'கந்தன்' என்ற பெயரின் சுருக்கமாகத் தெரிகிறது தமிழகத்தில் முருகனைக் கந்தனாக வழிபடும் மரபு முதல் முறையாக கி.பி. 7 ஆ நூற்றாண்டில் ஞானசம்பந்தர் தேவாரத்தில்தான் காணப்படுகிறது. இக்கால யாழ்ப்பாண மன்னர்களில் ஒருவன் கந்தமலையாரியர்கோன் என்ற விருதுப் பெயரைப் பெற்றிருந்தான். இதனால்இவ்விருதுப்பெயருக்குரிய மன்னனே ''கந்'' என்ற பெயர்பொறித்தநாணயத்தை வெளியிட்டான் எனக் கூறலாம். இரண்டாவது நாணயத்தில் வரும் ''ஆ'' என்ற எழுத்து இந்நாணயத்தை வெளியிட்ட மன்னர் தம்மை ஆரியச்சக்கரவர்த்திகள் என அழைத்துக் கொண்டதால் அவ்வம்சத்தைக் குறிக்கும் முதலெழுத்தாக எடுக்கலாம். அதேவேளை சங்ககாலம் தொட்டு முருகன் ஆறுமுகன் என அழைக்கப்பட்டுவருவதற்கும் சான்றுகள் உண்டு. நாணயத்தில ''ஆ'' என்ற எழுத்தோடு முருகனோடு தொடர்புடைய பாம்புடன் கூடிய மயில், வேல போன்ற சின்னங்களும் இடம் பெற்றிருப்பதால் ''ஆ'' என்ற எழுத்து ஆறுமுகனைக் குறிப்பதாகவும் எடுத்துக்கொள்ள இடமுண்டு. இவ்வரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் நல்லூர் இராசதானி காலத்தில் இருந்த சிவன் ஆலயங்களுடன்' கந்தன் ஆலயங்களும சிறப்பித்துக் கூறபபட்டுள்ளமை இங்கு கவனிக்கத் தக்கது.

இச்சான்றுகள் இடைக் காலததில் இலங்கைத தமிழர்கள் பலர் முருகனைக் கந்தனாக வழிபட்டதற்குச் சான்றாகும். இன்றும் இலங்கையிலுள்ள முருக ஆலயங்களில் மூன்றில் ஒரு பங்கு கந்தன் ஆலயங்கள் என்ற பெயரில அழைக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் வரலாற்றுப பழமை வாய்ந்த முருகன ஆலயங்கள் உள்ளன. பழனி, திருச்செந்தூர் போன்ற இடங்கள் கந்த மலை என இலக்கியங்களில் அழைக்கப்பட்டாலும நடைமுறையில் முருகன ஆலயங்கள் என அழைக்கபபடும் மரபே பெருமபாலும் காணப்படுகிறது. இலங்கையில் சிறப்பாக யாழ்ப்பாணத்தில கந்தன் வழிபாடு சிறப்புப் பெற்றதற்கு கந்தபுராணமே உதவியிருக்க வேண்டும் எனக் கூறும பேராசிரியர் வேலுப்பிள்ளை இது அருணகிரிநாதர் காலத்திற்கு முன்பாக கி.பி. 14 ஆம நூற்றாண்டளவில் காஞ்சியில் கச்சியப்பசிவாச்சாரியாரால் பாடப்பட்டது என்கிறார். கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் ஈழத்து முருகத்தலங்கள் பற்றிக் கூறும் அருணகிரிநாதரின திருப்புகழில் கதிர்காமத்துடன் யாழ்ப்பாணமும் குறிப்பிடப்பட்டுள்ளமை அக்காலத்திலேயே கந்தன் ஆலயங்கள் சிறப்புற்றிருந்ததைக் காட்டுகிறது. இதற்கு மேற்குறிப்பிட்ட நாணயங்கள் மேலும் சான்றாக அமைகின்றது எனக் கூறினால் மிகையாகாது.

(தொடரும்)

## சர்வதேச மாணவர் தினம்

(கல்வயல்)

எதிர்வரும் 17-ம் திகதி சர்வதேச மாணவர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

[எ-111[

## தினசரி தியானம்

## பிண நெஞ்சு

ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு
அன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றது மிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவு தோறலறிலை
செய்வதொன் றறியேன்.

**மாணிக்கவாசகர்**

நான் யாண்டும் ஜீவபோதத்தில் மூழ்கியிருப்பதால் உள்ளிருக்கும் சிவம் சவம் போன்று கிடக்கிறது.

அடுப்புக்கரி தன்னளவில் கன்னங்கரேரென்று கிடக்கிறது. ஆனால் அதைத் தீயுடன் சேர்த்தால் அது தேஜோமயமாகத் திகழ்கிறது. மனது அது போன்றது. உலக விஷயங்களில் சேர்ந்தால் அது பிண நெஞ்சு. பரம் பொருளைச் சார்ந்தால் அது சித் சொரூபம் ஆகிறது.

**ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்**

பயண...

டுக்கள் நேற்று முதல் விமானப் படையினரால் வழங்கப்பட்டுவருகிறது.

விமான டிக்கட் பெறும் பயணிகள் ஹெலிருள்ஸ் அலுவலகத்திற்கு சகல பயண அனுமதிக்கான விண்ணப்பத்தை நிரப்பிக் கொடுப்பதன் மூலம் ஒரு சில தினங்களில் பயணச்சீட்டைப் பெறமுடியும்? (வ)

## இனப்பிரச்சினை

ஜே வி பி பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்க முன்வந்த போது அதனுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சுமார் ஒருவருட காலத்திற்கு சமாதானப் பேச்சு எதனையும் பேசக் கூடாது என்று முன் நிபந்தனை விதித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன் படிக்கையை மீறிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழீழவிடுதலைப்புலிகளுடன் பேசவேண்டும் என்றும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பகிரங்கப் படுத்தியிருப்பது விடுதலைப் புலிகள்பற்றிய ஜே.வி பியின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்துவெளியிட்டுள்ளனர் [வ]

## ஈ. பி. டி. பி

மும் ஈ.பி டி.பி சார்பில்ஜனாதிபதி சட்டத்தரணி பலஸ் முஸ்தாபாவின் தலைமையில் சட்டத்தரணிகள் டாக்டர் ஜெகபதிகஸ்ரன்ஜெயக்கொடி ஆகியோரும் ஆஜராகி இருந்தனர்

தேர்தல் ஆணையாளர்சார்பில் பிரதி சட்டமா அதிபர் ஆர். ரி. சிறிபவாந்த் ஆஜரானார்.

(வ)

## யுத்தத்தை

நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு உறுதி பூண்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியில் வன்முறையாளர்கள், ஊழல் பேர்கள் 'மாபியர்' பணக்காரர்கள் சந்தர்ப்பவாதிகள் அணிதிரண்டுள்ளனர். பொதுஜன ஐக்கிய முன்னணியில் சமாதானம், மனிதகௌரவம், ஜனநாயகம் என்பவற்றைப் பாதுகாக்கும் அரசியல் கலாசாரத்தை. பாதுகாக்கும் முற்போக்குவாதிகள், தேசாபிமானிகள் அணிதிரண்டுள்ளார்கள்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து சமத்துவத்தின் அடிப்படையில் அரசியல் யாப்பின் மூலம் சமாதானத்தினை உருவாக்குதல் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதான நோக்கமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ)

### தலிபானின் கோட்டையென வர்ணிக்கப்படும்

# காபூல், கண்டகார் நகரங்கள்

# வடக்கு கூட்டணியின் வசம்

(காபூல்)

தலிபானின் கோட்டை எனக் கருதப்படும் காபூல், காண்டகார், இம்ரேஸ்ஆகிய நகர்களை கைப்பற்றிவிட்டதாக வடக்கு கூட்டணியின் செய்தித் தொடர்பாளர் டாக்டர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற கடும் சமரின் பின்காபூலுக்குள் நுழைந்த வடக்கு கூட்டணியின் படைகள் அங்குள்ள தலிபானின் முகாம்கள் பலவற்றையும் ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

தொடர்ந்து காண்டகார் நகரை நோக்கி முன்னேறிய வடக்கு கூட்டணியின் படைகள் தலிபானின் முக்கிய விமான நிலையம் ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க தலிபானின் தலைவர் முல்லா முஹமட்உமர் பாகிஸ்தானுக்கு தப்பிச் சென்று விட்டதாக ரஷ்ய செய்தி நிறுவனம் நேற்றிரவு தெரிவித்துள்ளது

வடக்கு கூட்டணி படையினர் காபூலுக்குள் நுழைந்ததும் நகர மக்கள் அனைவரும் வீதிகளில் திரண்டு மகிழ்ச்சி ஆரவாரத்துடன் அவர்களை வரவேற்றனர்.

வெற்றி, வெற்றியென அவர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தில் கோஷம்எழுப்பியதாக ஈரான் ஒளிபரப்பு சேவை தகவல் வெளியிட்டது

இதேவேளை ஒஸாமா பின்லேடன் இன்னமும் உயிருடன் இருப்பதாகவும் அவருக்கு போதியபாதுகாப்பைதம்மால் வழங்க முடியுமென்றும் தலிபான் அறிவித்துள்ளமைஇங்கு குறிப்பிடத்தக்கது.

(ந-4)

## திருமலை ஆஸ்பத்திரி ஊழியர்கள் உண்ணாவிரதம்

(திருமலை)

திருகோணமலை அரசினர் வைத்திய சாலையில் பணியாற்றும் சமயாசமய ஊழியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரிசாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டமொன்றினை ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான இப்போராட்டம் தொடர்ந்துநடைபெற்று வருவதாக தெரிவிக்கப் படுகின்றது.

(ந-4)

## புலிகள் சுட்டதில் பொலிஸார் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி. ஏறாவூர்ப் பகுதியில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபில் ஒருவர் விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவினரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

இதனையடுத்து பொலிஸார்மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுமகன் ஒருவர் உயிரிழந்துள்ளாரென்று மட்டக்களப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(இ)

அன்பர்கள், வாடிக்கையாளர்கள், வர்த்தகப் பெருமக்கள் அனைவருக்கும் எம்

தீபாவளி நல் வாழ்த்துக்கள்

சுத்தமான, தரமான நல்லெண்ணெய் V.S.P

V.S.P. லஞ் ஒயில்

தயாரிப்பாளர்

பரிமளா ஸ்ரோர்ஸ்

26 A மானிப்பாய் வீதி, T.P. 2785 யாழ்ப்பாணம்.

(கி-2574)

பொதுத் தேர்தல் - 2001

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்



தியாக மாமனிதர்

நமக்காகத் தனது இரத்தத்தைச் சிந்தியவர் மாமனிதர்
இவருக்கு நாங்கள் எதைத்தான் தந்திருக்கிறோம்
தமிழினத்திற்காகத் தன்னுயிரையே தந்திருக்கிறார் குமார்
நன்றி உணர்வோடு தமிழ்க்காங்கிரஸிற்கே வாக்களிப்போம்


சுயநிர்ணய உரிமை எமது பிறப்புரிமை
சுதந்திரத்திற்காக உழைப்போம்

திரு.அ.விநாயகமூர்த்தி
எல்.எல்.பி. இலங்கை சட்டத்தரணி
அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவர்
1

திரு.சி.வி.கே.சிவஞானம்
பட்டயச் செயலர்
முன்னாள் மாநகரசபை ஆணையாளர்
யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர்
5

திரு.கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்
எல்.எல்.பி. சிறப்புலண்டன் பரிஸ்ரர் (லிங்கன்ஸ்இன்) லண்டன்.
சட்டத்தரணி இலங்கை
8

தமிழர் விடுதலைக்கூட்டணி



எங்கள் விருப்புவாக்குகள் மூன்றும் தமிழ்க் காங்கிரஸிற்கே வாழ்க தமிழ்.

1 2 3 4 5 6 7 8 9 10 11 12

(கி-3946)

- அல்வாய் வாழ் மக்கள்.